Department of Education,Sabaragamuwa Province/ Weekly School

செயலட்டை 24 | பாடம்:- வணிகக்கல்வி | தரம்:12

தயாரிப்பு:- S. A. S. டிலக்சனி (BBA)
இ/ ஸ்ரீ கிருஷ்ணா மகா வித்தியாலயம்

வாரம் 02
04.10.2021 – 10.10.2021

# போக்குவரத்தும் வழங்கல் சேவையும் மாதிரி வினாக்கள்

1. இலங்கையின் நெடுஞ்சாலை மற்றும் புகையிரத போக்குவரத்து முறைகளில் கடந்த அண்மைக் காலங்களில் எவ்வாறான முன்னேற்றத்தை காணக்கூடியதாக உள்ளது?
2. "வணிகங்களின் அபிவிருத்திக்கு வினைத்திறனான போக்குவரத்து முறைமை அத்தியாவசியமாகும்" மேற்கூறிய கூற்றை விளக்குவதுடன் போக்குவரத்து முறைமையை விபரிக்குக.
3. இலங்கையின் நகர்ப்புறங்களில் சூழல் மாசுபடுதல் தொடர்பில் எதிர்நோக்கப்படும் ஒரு பிரதான பிரச்சினை கழிவுப் பொருட்களை முடிவு செய்வதற்கான இடங்களின் பற்றாக்குறையாகும். வணிகக்கல்வி மாணவன் எனும் முறையில் இப்பிரச்சினையை வெல்வதற்கு உதவக்கூடிய மாற்று வழிகளையும் நடைமுறை சாத்திய தீர்வுகளையும் முன்வைக்க.
4. இலங்கையில் பயணிகளுக்கும் பண்டங்களுக்கு மான போக்குவரத்து முறைமையின் வினை திறமையை மேம்படுத்துவதற்கு செயல் ரீதியாக நீர் தரக்கூடிய ஆலோசனைகளை அவற்றுக்கான காரணங்களை தந்து விளக்குக.
5. பண்டங்களை கொண்டு செல்வதற்கு பொருத்தமான போக்குவரத்து சாதனத்தை தெரிவு செய்யும்பொழுது ஒரு வணிக நிறுவனம் கவனத்தில் கொள்ள வேண்டிய மூன்று விடயங்களை குறிப்பிடுக.
6. இலங்கையில் புகையிரத போக்குவரத்தின் வினை திறனை மேம்படுத்துவதற்கு நீர் வழங்கும் ஆலோசனைகள் யாவை? உமது ஆலோசனைக்கான காரணங்களை தருக.

7. கடல்வழியே பண்டங்களை ஏற்றி செல்வதற்கான கட்டணங்களை காட்டிலும் விமானக் கட்டணங்கள் பொதுவாக மிக உயர்ந்தவையாகும். எனினும் வணிகர் ஒருவர் கடல் கடந்த ஒரு சந்தைக்கான தனது பொருட்களை கடல் மார்க்கமாக அன்று விமான மார்க்கமாகவே ஏற்றி அனுப்ப தீர்மானிக்கிறார். இத்தீர்மானத்தை காரணம் யாது என்பதை குறிப்பிடுக.

8. போக்குவரத்து வணிக செயற்பாடுகளுக்கு பெரும் பங்களிப்பை செய்துள்ள போதும் அவை இயற்கை சூழலுக்கும் மனித சூழலுக்கும் கணிசமான அளவு பாதகமான விளைவுகளையும் ஏற்படுத்துகின்றது இக்கூற்றினை பரிசீலிக்கவும்.

9. நுவரெலியாவில் இருந்து கொழும்புக்கு புத்தம் புதிய பூக்களை கொண்டு வர பயன்படுத்தப்படும் போக்குவரத்து முறைமையை தெரிவு செய்வதில் கருத்தில்கொள்ள வேண்டிய பிரதான காரணிகள் மூன்றினை குறிப்பிடுக.

10. இலங்கையின் தேசிய விமான சேவை யாது?

11. போக்குவரத்து முறை ஒன்றின் நான்கு அடிப்படை அம்சங்கள் யாவை

12. பின்வரும் ஒவ்வொன்றுக்கும் நீர் சிபாரிசு செய்யும் அடிப்படை போக்குவரத்து முறையை காரணங்களுடன் குறிப்பிடுக.

    - தயிர் அம்பாந்தோட்டையில் இருந்து கொழும்புக்கு
    - புதிய மலர் நுவரெலியாவில் இருந்து கொழும்புக்கு
    - புதிய கடல்மீன்கள் கொழும்பில் இருந்து லண்டனுக்கு

13. இலங்கையின் புகையிரத சேவையை அபிவிருத்தி செய்வதற்கு அண்மையில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை விபரிக்குக.

14. வெளிநாட்டு சுற்றுப் பயணம் ஒன்றை மேற்கொள்ள விரும்பும் இலங்கையர் ஒருவர் பெற்றுக்கொள்ள அவசியமான ஆவணங்களை குறிப்பிடுக.

15. நெடுஞ்சாலையில் ஒரு சாரதி தனது மோட்டார் வாகனத்தை செலுத்தும் போது கட்டாயமாக தன்னுடன் கொண்டு செல்ல வேண்டிய மூன்று ஆவணங்கள் யாவை?

16. ஒரு வியாபாரியின் எந்தவகை பொருட்களுக்கான ஒரு பொருத்தமான போக்குவரத்து முறையை தெரிவு செய்யும்போது என்ன பிரதானமான காரணியை கருத்திற் கொள்ளுதல் வேண்டும்?

17. பின்வரும் ஒவ்வொரு சந்தர்ப்பங்களுக்கான மிகப் பொருத்தமான போக்குவரத்து முறையை எழுதுக.

    - திருகோணமலையில் இருந்து காலிக்கு கோதுமை மாவை கொண்டு வருதல்.

- நுவரெலியாவில் இருந்து கொழும்புக்கு வாடாத மலர்களைக் கொண்டு வருதல்.
- கொழும்பிலிருந்து அநுராதபுரத்திற்கு பெட்ரோலியத்தை கொண்டுவருதல்.

18. பின்வருவன பற்றிய சிறுகுறிப்பு எழுதுக
    - சுமை சீட்டு
    - கப்பல் வார் நாமம்
    - கப்பல் அறிக்கை
    - மேடை சீட்டு
    - ஒப்படைக்கும் உத்தரவு

19. பின்வரும் பொருள் போக்குவரத்துக்கான ஆவணங்களை குறிப்பிடுக
    - லாரி
    - புகையிரதம்
    - விமானம்
    - கப்பல்

20. புகையிரத போக்குவரத்து முறைமையில் போக்குவரத்து நெருக்கடிகளை குறைப்பதற்கு பல்வேறு நடவடிக்கைகள் அண்மைக்காலங்களில் மேற்கொள்ளப்பட்டன அவ்வாறு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் ஐந்திணை வரிசைப்படுத்துக.